**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 148/2020.**

**வழக்கு சாட்சி – அ.சா. 3 (பட்டியல் சாட்சி – 5).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜாத்தி | ஜாதி | |
| கணவர் பெயர் | முருகன். | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | கெப்புரெங்கன்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 55/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –இன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, கெப்புரங்கன்பட்டியில் குடியிருந்துகொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 05.11.2019 ஆம் தேதி மாலை 05.45 மணிக்கு கெப்புரெங்கன்பட்டி கோவில் அருகே, செல்வகணேன் மற்றும் செல்லம்மாள் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக, போலிசார் அங்கு வந்து, விசாரித்து, எழுதிக் கொண்டார்கள். அதில் நானும், ரகு என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சாட்சி செல்வகணேசன் எனது மகன் ஆவார். பொதுவாக, தோட்டத்து வேலைக்குச் செல்பவர்கள் 01.00 மணி முதல் 02.00 மணிக்குள் வேலை முடித்து வீட்டிற்கு வந்துவிடுவார்கள் என்றால், சரிதான். புகார் கொடுக்க அ.சா.1 சென்றபோது, நானும் உடன் சென்றிருந்தேன். காவல் நிலையம் சென்றபோது, போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கிக் கொண்டார்கள் என்றால்,

சரியல். புகார்தாரர் என் மகன் என்பதால், நான் வழக்கிற்காக ஆதரவாக, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.28 17:50:46 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**